# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழறிஞர்களும்

## தொகுதி – III




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் கே. சுபாஷினி

முனைவர் சு. இராமலிங்கம்

# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழறிஞர்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


பதிப்பாசிரியர்கள் : **முனைவர் க. முருகேசன்**
**முனைவர் சு. குமரன்**
**முனைவர் கே. சுபாஷினி**
**முனைவர் சு. இராமலிங்கம்**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : டிசம்பர், 2017

வெளியீடு : **தமிழ்த்துறை**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641029.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017

பக்கங்கள் : X + 460 = 470

விலை : உரூ. 350/-

**ISBN : 978 - 93 - 85267 - 38 - 3**


# International Conference on Tamil Literature and Tamil Scholars of the 20th Century


Editor's : **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**
**Dr. K. Subhashini. Dr. S. Ramalingam**

Copyright's : Editors

First Edition : December, 2017

Published : **Department of Tamil**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.

Computer : **Prdag Print**, Coimbatore - 29.

Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017

Pages : X + 460 = 470

Prize : **Rs. 350/-**

223. **ரா. பிரேமாவதி** 1003
வைரமுத்துவின் பெண்ணியச் சிந்தனைகள்

224. **இரா. கலாராணி** 1009
சிலப்பதிகாரத்தில் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைத்திறன்

225. **சா. ரெபேக்காள்** 1015
நற்றிணையில் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயரின் உரைத்திறன்

226. **முனைவர் க. சிவனேசன்** 1019
தி.ஜானகிராமனின் வாழ்வும் பணியும்

227. **முனைவர் க. பழனிவேல்** 1025
அடிகளாசிரியர் என்னும் பல்கலையாசான்

228. **ப. கருப்புசாமி** 1031
பேராசிரியர் ந. இரா. சென்னியப்பனாரின் இரத்தினகிரி பாலமுருகன் பிள்ளைத்தமிழ்

229. **சொ. இளங்கோ** 1036
சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்வும் தமிழ்த் தொண்டும்

230. **முனைவர் ஜெ. நிஷாந்தினி** 1040
முருகு சுந்தரத்தின் வெள்ளை யானை கவிதை- ஒரு பார்வை

231. **முனைவர் ச. அரிச்சந்திரன்** 1044
கவிப்பேரரசு வைரமுத்து

232. **முனைவர் ம. கீதா** 1050
பாரதியின் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும்

233. **முனைவர் இரா. மணிமேகலை** 1054
திருமுருக கிருபானந்த வாரியார் வாழ்வும் பணிகளும்

234. **முனைவர் பொ. மோகனா** 1059
நீதி இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள்

235. **முனைவர் கு. முத்துக்குமார்** 1062
பேராசிரியர் ப. மருதநாயகத்தின் பாரதியம்

236. **பா. பொன்னுராஜன்** 1066
செய்குதம்பிப் பாவலரும் அவதானக் கலையும்

237. **ரா. ராமலெட்சுமி** 1070
முனைவர் திலகவதி சண்முகசுந்தரம் அவர்களின் திருப்புகழ் உரைநயம்

238. **முனைவர் ஆ. சரவணன்** 1075
ஊரன் அடிகளார் பார்வையில் வள்ளலாரும் பாரதியாரும்

# 235 பேராசிரியர் ப. மருதநாயகத்தின் பாரதியம்

**முனைவர் கு. முத்துக்குமார்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029*

## முன்னுரை

சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்ற பாரதியின் வேண்டுகோளுக்கு மற்ற உலக மொழி இலக்கிய வளமெல்லாம் தமிழுக்கு வரவேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கு உலக இலக்கியத்திற்கு இணையாக உள்ளதா என்பதை உரசிப் பார்க்க வேண்டும் என்ற வேட்கையும் தான் ஏதுவாக இருக்க முடியும். உலக இலக்கியங்களைத் தமிழுக்குக் கொண்டு வருவது தமிழைப் பிறமொழிகளில் பெயர்த்துக் கொண்டு செல்வது போன்றவைகளுக்கு மேலாகத் தமிழ் மொழி இலக்கியங்கள் மீது பிற மொழியினர் நிகழ்த்திய ஆய்வுகள் தமிழ் மொழிக்கு ஆக்கம் தருவனவாக இருப்பதை தமிழ் ஆய்வாளர்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் திறனாய்வு செய்து வெளியிடுவது மிக முக்கியமான ஆக்கமாகக் கருதமுடியும். பேராசிரியர் ப.மருதநாயகம் தான் கற்ற மேலைத் திறனாய்வுக் கோட்பாடுகளை தமிழ் இலக்கியங்கள் மீது பொருத்திப் பார்த்து உலக இலக்கியங்களுக்கு நம் படைப்புகள் எவ்விதத்திலும் குறைந்தவை அல்ல என்பதுடன் அதன் உச்சங்களை வெளிப்படுத்தும் விதமாக ஒப்பிலக்கியத் திறனாய்வு என்ற புதிய அணுகுமுறையைக் கையாண்டு தமிழின் செவ்வியல் இலக்கியத் தன்மைகளை எவ்வித சமரசத்திற்கும் இடமின்றித் தன் வாழ்நாள் காலமெல்லாம் ஆராய்ந்து வருகிறார். தனது 'பாரதி பதினாறு' என்ற நூலில் பாரதியாரின் பன்முக ஆளுமையை உலக அறிஞர்களுடன் ஒப்பிட்டுள்ள திறத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.

## பாரதி பதினாறு

பாரதியாரைப் பழுதறக்கற்றப் பேராசிரியர் ப. மருதநாயகம் தான் வழக்கமாகப் பயிலும் பிற மொழி இலக்கியங்களுடனும் சமகால கவிஞர்களுடனும் ஒப்பிட்டுத் திறனாய்வு செய்கிறார். தான் தேடிக்கற்ற பாரதியை உலகக் கவிஞர்களுடனும் இந்திய பிற மொழிக் கவிஞர்களுடனும் ஒப்பிட்டு பாரதியின் சிறப்பையும் அவர்களிடமிருந்து பாரதி எவ்வாறு மாறுபடுகிறார் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். பாரதியைப் பாரதிய மேலைக் கவிஞர்களோடும் தமிழ் அறிஞர்களோடும் ஒப்பிட்டு பாரதியின் விடுதலை உணர்வைப் புதிய பரிமாணங்களில் வெளிப்படுத்துகிறார். பாரதியின் கவிதைகளில், விடுதலை உணர்வு, நாட்டுப்பற்று, தொலை நோக்குப் பார்வை ஆகியவற்றை வெளிப்படுத்திய பேராசிரியர், பாரதியின் பகவத்கீதையில் அரவிந்தரைப் பின்பற்றி பகவத்கீதை தொடர்பான ஆய்வில் தமிழர்களுக்கு உண்மையை உரைக்கவில்லை என்று பாரதி மீதான தனது விமர்சனத்தையும் வைக்கிறார்.